இன்றைய செய்தி நாளைய வரலாறு

முரசொலி

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

சனிக்கிழமை 09.05.2026

# நன்றி உணர்ச்சி இருக்கிறதா ராகுலுக்கு?

2018 ஆம் ஆண்டு தலைவர் கலைஞர் சிலை திறப்பு விழாவுக்கு சோனியா அம்மையார் அழைக்கப்பட்டு இருந்தார். அவருடன் ராகுல் காந்தியும் வந்திருந்தார். அப்போது உரையாற்றிய கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள், "பிரதமர் வேட்பாளராக ராகுல் காந்தியை முன்மொழிகிறேன்" என்று சொன்னார். இது ராகுல் காந்திக்கு நினைவில் இருக்கிறதா?

2019 நாடாளுமன்றத் தேர்தலில் ராகுல் காந்தியை பிரதமர் வேட்பாளராக காங்கிரஸ் கட்சி முன்மொழிவதற்கு முன்னதாகவே அவர் பெயரை முன்மொழிந்தவர் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள். அந்தத் தேர்தலில் தமிழ்நாட்டில் மொத்தம் உள்ள 39 தொகுதிகளில் 38 தொகுதிகளைக் கைப்பற்றியது வரலாறு. காங்கிரஸ் சார்பில் 9 உறுப்பினர்கள் நாடாளுமன்றத்துக்குப் போனார்கள். அப்போது நாடாளுமன்றத்தில் காங்கிரஸ் கட்சிக்கு எதிர்க்கட்சித் தகுதிகூட கிடைக்கவில்லை. 52 இடங்களிலேயே இந்தியா முழுக்க வெற்றி பெற்றிருந்தது. அதில் 9 இடங்கள் தமிழ்நாட்டில் இருந்து கிடைத்தவை என்பது ராகுல் காந்திக்கு நினைவில் இருக்குமா?

2021 ஆம் ஆண்டு சட்டமன்றத் தேர்தல். சேலம் பொதுக்கூட்டத்தில் ராகுல் காந்தியை மேடையில் வைத்துக் கொண்டே, "தமிழ்நாட்டைப் போல கூட்டணி அமைத்தால் இந்தியா முழுவதும் வெற்றி பெறலாம்" என்று சொன்னார் தலைவர் மு.க.ஸ்டாலின். அதுதான் காங்கிரஸ் மனதை மாற்றியது. அகில இந்திய காங்கிரஸ் தீர்மானமாக ஆனது.

2023 ஆம் ஆண்டு மார்ச் 1 ஆம் நாள் சென்னையில் தலைவர் அவர்களின் பிறந்த நாள் பொதுக்கூட்டம் நடைபெற்றது. காஷ்மீரத்துச் சிங்கம் பரூக் அப்துல்லா, பீகார் மாநிலத்தின் துணை முதலமைச்சர் தேஜஸ்வீ, உத்தரப்பிரதேச மாநிலத்தின் முன்னாள் முதலமைச்சர் அகிலேஷ் ஆகியோர் அந்த மேடையில் இருந்தார்கள்.

**அப்போது உரையாற்றிய தலைவர் அவர்கள், "2024 தேர்தலில் பா.ஜ.க.வை வீழ்த்த நினைக்கும் அனைவரும் ஒன்றாகச் சேர வேண்டும். மாநிலங்களுக்குள் இருக்கும் அரசியல் வேறுபாட்டை வைத்து, தேசிய அரசியலைத் தீர்மானித்தால் இழப்பு நமக்குத்தான் என்பதை அனைத்துக் கட்சிகளும் உணர வேண்டும்.**

**அரசியல் கட்சிகள் தங்களுக்குள் இருக்கும் வேறுபாடுகளை மறந்து - விட்டுக் கொடுத்து - பா.ஜ.க.வுக்கு எதிராக ஒன்றுசேர வேண்டும். அதே நேரத்தில் சிலரால், 'காங்கிரஸ் அல்லாத கட்சிகளின் கூட்டணி' என்று சொல்லப்படும் வாதங்களையும் நிராகரிக்க வேண்டும். அது கரை சேராது. தேர்தலுக்குப் பிறகு கூட்டணி வைத்துக் கொள்கிறோம் - என்று சொல்வதும் நடைமுறைக்குச் சரியாக வராது.இதனை பா.ஜ.க.வை எதிர்க்கும் கட்சிகள் அனைத்தும் உணர்ந்து செயல்பட வேண்டும்" என்று வெளிப்படையாகச் சொன்னார்.**

பா.ஜ.க. - காங்கிரஸ் அல்லாத மூன்றாவது அணி முயற்சிகள் அனைத்துக்கும் அன்றைய தினமே முற்றுப்புள்ளி வைத்தார். அதே போல் காங்கிரசுடன் சேர்ந்தால்தான் பா.ஜ.க.வை வீழ்த்த முடியும் என்பதையும் சொன்னார். இதுதான் பா.ஜ.க.வை எதிர்க்கும் அகில இந்தியத் தலைவர்கள் மனதில் மாற்றத்தை ஏற்படுத்தியது.

**காங்கிரஸ் அல்லாத மூன்றாவது அணி அமைக்கலாம் என்ற நோக்கத்துடன் தெலங்கானா முதலமைச்சர் சந்திர சேகர ராவ் வந்து தலைவர் மு.க.ஸ்டாலினைச் சந்தித்தார். 'காங்கிரஸ் இல்லாமல் கூட்டணி சாத்தியமில்லை' என்று தலைவர் சொன்னார். இதே சிந்தனையில் மேற்கு வங்க முதலமைச்சர் மம்தா பானர்ஜி சந்தித்தார். அவரிடமும் இதையே சொன்னார். இதே நோக்கத்துடன் டெல்லி முதலமைச்சர் அரவிந்த் கெஜ்ரிவால் சந்தித்தார். அவரிடமும் தலைவர் இதையே சொன்னார். இதன்பிறகு தான், மம்தாவும் அரவிந்த் கெஜ்ரிவாலும் மனம் மாறினார்கள்.**

இதுதான் அகில இந்திய அளவில் பா.ஜ.க.வுக்கு எதிரான ஒற்றை அணியாக அமைந்தது. 2023 ஆம் ஆண்டு ஜூலை 18 ஆம் நாள் பாட்னாவில் ' INDIA ' கூட்டணிக்கான விதை போடப்பட்டது. 'Indian national developmental inclusive alliance' - என்பதாகப் பெயரும் சூட்டப்பட்டது. இது ஒன்றாக இருக்காது என்று நினைத்தார்கள். பிரச்சினை ஏற்படாத வகையில் தீர்வைச் சொன்னார் தலைவர் மு.க.ஸ்டாலின்.

'இந்தியா' கூட்டணியில் 28 கட்சிகள் இணைந்து போட்டியிட்டன. ஓரிரு மாநிலங்கள் நீங்கலாக அனைத்திலும் 'இந்தியா' கூட்டணி அமைந்தது. இதுதான் பா.ஜ.க.வுக்கு ஏற்பட்ட முதல் தோல்வி ஆகும். தங்களுக்கு எதிராக யாருமில்லை என்ற கற்பனை உலகத்தில் இருந்த பா.ஜ.க.வை, 'இந்தியா' கூட்டணிதான் யதார்த்த உலகத்துக்கு அழைத்து வந்தது.

'400 வெல்வோம், 370 பிடிப்போம்' என்று சொன்ன பா.ஜ.க. 240 என்ற எண்ணிக்கைக்கு இறங்கியது. இதற்கான அரசியல் விதையை தமிழ்நாடுதான் விதைத்தது. புதுச்சேரி உள்ளிட்ட தமிழ்நாட்டின் நாற்பது தொகுதிகளிலும் முழுமையான வெற்றியைக் கைப்பற்றியதன் மூலமாக 'இந்தியா' கூட்டணியின் கோட்டையாக தமிழ்நாடு பிரகடனப்படுத்தப்பட்டது. மற்ற மாநிலங்களில்கூட ஒரு தொகுதி, இரண்டு தொகுதியை பா.ஜ.க. கைப்பற்றியது. ஆனால் தமிழ்நாட்டில் பா.ஜ.க.வின் பம்மாத்து பலிக்கவில்லை. பின்னங்கால் பிடறியில் அடிபட விரட்டப்பட்டது பா.ஜ.க.

**கோவை வந்த ராகுல், ஒரு கடையில் இறங்கி இனிப்பு வகைகளை வாங்கி வந்து மாண்புமிகு முதலமைச்சர் மு.க.ஸ்டாலினிடம் வழங்கினார். 'என் சகோதரர்' என்று மாண்புமிகு முதலமைச்சரை அழைத்தார் ராகுல். 'இது வரை யாரையும் நான் என் சகோதரர் என்று அழைத்ததில்லை' என்றும் சொன்னார். இதெல்லாம் பொய் வேஷமா?**

ராகுல் தனது நன்றி உணர்ச்சியை வெளிப்படுத்தும் வகையில் நடைபெற்ற சட்டமன்றத் தேர்தலில் நடந்து கொண்டாரா? இந்தக் கூட்டணியின் அமைதியைக் குலைக்கும் வகையில் செயல்பட்ட காங்கிரஸ் கட்சியினரைத் தடுத்தாரா ராகுல்? 'திராவிட மாடல்' ஆட்சியின் வளர்ச்சியைக் கொச்சைப்படுத்தினார் ராகுலின் நண்பர் பிரவீன் சக்கரவர்த்தி.

**அரசியல் ரீதியாக சீண்டிக் கொண்டே இருந்தார்கள் சிலர். இவர்களுக்குப் பின்னணியாக காங்கிரஸ் தலைமையே இருந்திருக்கிறது. தலை சொல்லாமல் வால் ஆடாது. இதைவிட நம்பிக்கைத் துரோகம் வேறு உண்டா?**

புதுச்சேரியில் காங்கிரஸ் - தி.மு.க. கூட்டணி அமைந்தது. தி.மு.க. போட்டியிட்ட தொகுதிகளில் காங்கிரஸ் கட்சி போட்டி வேட்பாளர்கள் போட்டியிட்டார்கள். திருபுவனை, மங்களம், காலாப்பட்டு, ராஜ்பவன், உழவர் கரை, காரைக்கால் ஆகிய தொகுதிகளில் தி.மு.க. வேட்பாளர்களை எதிர்த்து காங்கிரஸ் கட்சியே போட்டியிட்டது. இத்தகைய போட்டி வேட்பாளர்கள், ராகுல் காந்தியைச் சந்தித்து வாழ்த்துப் பெற்றார்கள்.

**இதுதான் நன்றி உணர்ச்சியின் அடையாளமா? இவ்வளவு கெட்ட எண்ணம் எந்த மனிதனுக்கும் இருக்கக் கூடாது.**

**வினை விதைத்தால் வினையைத்தானே அறுவடை செய்ய முடியும்?**

### காங்கிரஸ் கட்சி உடனான கூட்டணி முறிந்த நிலையில்

# மக்களவையில் தி.மு.க. இருக்கைகளை மாற்றித் தர வேண்டும்!

## நாடாளுமன்ற கழகக் குழுத் தலைவர் கனிமொழி கருணாநிதி சபாநாயகருக்கு கடிதம்!

**சென்னை, மே.9-**

**காங்கிரஸ் கட்சி உடனான கூட்டணி முறிந்த நிலையில், மக்களவையில் தங்களுக்கான இருக்கைகளை மாற்றி தர வேண்டும் என நாடாளுமன்ற தி.மு.க. குழுத் தலைவர் கனிமொழி கருணாநிதி மக்களவை சபாநாயகருக்கு கடிதம் எழுதியுள்ளார்.**

நாடாளுமன்ற தி.மு.க. குழுத் தலைவர் கனிமொழி கருணாநிதி விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-



தமிழகத்தில் ஏற்பட்டுள்ள அரசியல் மாற்றங்களைத் தொடர்ந்து, மக்களவையில் திமுக உறுப்பினர்களுக்குத் தனியாக இருக்கை வசதி ஒதுக்கித் தர வேண்டும் என்று திமுக துணைப் பொதுச் செயலாளரும், நாடாளுமன்ற திமுக குழுத் தலைவர் கனிமொழி கருணாநிதி சபாநாயகர் ஓம் பிர்லாவுக்குக் கடிதம் எழுதியுள்ளார்.

காங்கிரஸ் உடனான கூட்டணி முடிவுக்கு வந்துள்ள நிலையில், மக்களவையில் காங்கிரஸ் உறுப்பினர்களுக்கு அருகிலேயே திமுக உறுப்பினர்கள் அமர்வது இனி பொருத்தமாக இருக்காது என்று அக்கடிதத்தில் கனிமொழி கருணாநிதி எம்.பி சுட்டிக்காட்டியுள்ளார். தமிழகத்தில் நிலவும் தற்போதைய அரசியல் சூழல்களைக் கருத்தில் கொண்டு இந்த மாற்றம் அவசியமாகிறது என்று குறிப்பிட்டுள்ளார்.

மக்களவையில் மூன்றாவது பெரிய கட்சியாக உள்ள திமுக, இனி வரும் காலங்களில் தனது கருத்துக்களைச் சுதந்திரமாகவும், தனித்துவமாகவும் முன்வைக்க விரும்புகிறது. திமுக உறுப்பினர்கள் தங்கள் நாடாளுமன்றப் பொறுப்புகளைத் திறம்பட நிறைவேற்றவும், தங்குதடையின்றிச் செயல்படவும் ஏதுவாகத் தனி இருக்கைகள் ஒதுக்கப்பட வேண்டும் என வலியுறுத்தப்பட்டுள்ளது.

### அரசியல் இடைவெளியைப் பயன்படுத்தி

# மும்மொழித் திட்டமான 'பி.எம்.ஸ்ரீ' திட்டத்தைத் திணிப்பதா?

## எஸ்.டி.பி.ஐ. கட்சி கடும் கண்டனம்!

சென்னை. மே 9-

அரசியல் இடைவெளியைப் பயன்படுத்தி மும்மொழித் திட்டமான 'பிஎம் ஸ்ரீ' திட்டத்தைத் திணிப்பதா? என ஒன்றிய அரசுக்கு எஸ்டிபிஐ கட்சி கடும் கண்டனம் தெரிவித்துள்ளது.

இதுதொடர்பாக எஸ்டிபிஐ கட்சியின் மாநில தலைவர் முகம்மது முபாரக் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது:

தமிழ்நாட்டில் சட்டமன்றத் தேர்தல் வாக்குப்பதிவு முடிந்து, புதிய அரசு இன்னும் பதவி ஏற்காத ஒரு தற்காலிக இடைவெளி நிலவி வரும் நிலையில், ஒன்றிய பாஜக அரசு தனது மும்மொழித் திட்டத்தைத் திணிக்கும் 'பிஎம் ஸ்ரீ' (PM SHRI) திட்டத்தை ஏற்கச் சொல்லி தமிழகத்திற்கு நெருக்கடி தருவது மிகுந்த கண்டனத்திற்குரியது.

மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட ஒரு முழுமையான அரசு பொறுப்பில் இல்லாத நேரத்தில், இத்தகைய கொள்கை முடிவுகளை எடுக்கச் சொல்லி அதிகாரிகளை வற்புறுத்துவது ஜனநாயகப் படுகொலையாகும். தமிழகத்தின் கல்வி உரிமையைத் தீர்மானிக்கும் அதிகாரம் மக்களால் தேர்ந்தெடுக்கப்படவுள்ள புதிய அரசுக்கே உள்ளது. அதை விடுத்து, அதிகார மட்டத்தில் அழுத்தங்களைக் கொடுத்து மும்மொழித் திட்டத்தை நுழைக்கப் பார்ப்பது ஒன்றிய அரசின் அரசியல் அறமற்ற செயலையே காட்டுகிறது.

கல்வி மேம்பாட்டிற்கான நிதி என்பது மாநிலங்களின் அடிப்படை உரிமை. அந்த நிதியை வழங்க 'தேசியக் கல்விக் கொள்கையை' ஏற்க வேண்டும் என்ற நிபந்தனையை விதிப்பதன் மூலம், தமிழகத்தின் இருமொழிக் கொள்கையைச் சிதைக்க ஒன்றிய அரசு துடிக்கிறது. இது கூட்டாட்சி தத்துவத்திற்கு விடப்பட்ட சவாலாகும். தமிழகத்தின் மொழி உணர்வோடும், கல்வி உரிமையோடும் விளையாடுவதை ஒன்றிய அரசு நிறுத்திக்கொள்ள வேண்டும். புதிய அரசு அமையவுள்ள வேளையில், கொல்லைப்புற வழியாக இந்தித் திணிப்பை மேற்கொள்ளும் 'பிஎம் ஸ்ரீ' திட்டத்தை எஸ்டிபிஜ கட்சி உள்ளிட்ட ஜனநாயக சக்திகள் ஒருபோதும் அனுமதிக்காது.

தமிழகத்தின் கல்விச் சுதந்திரத்தைப் பறிக்க நினைக்கும் ஒன்றிய அரசின் எதேச்சாதிகாரப் போக்கை முறியடிக்க ஜனநாயக சக்திகள் ஒன்றிணைய வேண்டும். தமிழகத்தின் மீது இது போன்று மும்மொழி கொள்கைகளை திணிக்கும் நடவடிக்கைகளை ஒன்றிய பா.ஜ.க. அரசு கைவிட வேண்டுமென கேட்டுக்கொள்கிறோம். இவ்வாறு அவர் அந்த அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

# மத்திய அரசு என்ன மிரட்டினாலும் பி.எம். ஸ்ரீ திட்டத்தை ஏற்றுக்கொள்ளக் கூடாது!

## முன்னாள் அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி பேட்டி!

திருச்சி, மே.9-

திருச்சியில் செய்தியாளர்களைச் சந்தித்த தமிழக பள்ளிக்கல்வித் துறை முன்னாள் அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி கூறியதாவது:-



"பன்னிரண்டாம் வகுப்புப் பொதுத்தேர்வில் கடந்த ஆண்டைவிடத் தேர்ச்சி விகிதம் 0.1 சதவீதம் அதிகரித்துள்ளது மிகுந்த மகிழ்ச்சி அளிக்கிறது. இதற்காக உழைத்த மாணவர்களுக்கும், ஆசிரியர்களுக்கும் எனது வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கிறேன். முன்னாள் முதல்வர் ஸ்டாலின் அவர்களும் இதற்காகத் தனது மகிழ்ச்சியைப் பகிர்ந்துள்ளார்.

ஒட்டுமொத்தத் தேர்ச்சி விகிதத்தில் திருச்சி மாவட்டம் 5வது இடத்தையும், அரசுப் பள்ளிகளின் தேர்ச்சி விகிதத்தில் 3வது இடத்தையும் பெற்றுள்ளது பெருமைக்குரியது.

பன்னிரண்டாம் வகுப்புத் தேர்வு முடிவுகள் மட்டுமே வாழ்க்கை கிடையாது. தேர்வில் வெற்றி பெறாத மாணவர்கள் வருத்தப்படாமல், துணைத் தேர்விற்குத் தயாராக வேண்டும்.

பி.எம். ஸ்ரீ திட்டத்தை ஏன் எதிர்க்கிறோம் என்பதை ஏற்கனவே விளக்கியுள்ளோம். இருமொழிக் கொள்கையே தமிழ்நாட்டிற்குப் போதுமானது. மத்திய அரசு என்ன கூறி மிரட்டினாலும், ஆட்சிக்கு வருபவர்கள் யாராக இருந்தாலும் இத்திட்டத்தை ஏற்றுக்கொள்ளக் கூடாது. இருமொழிக் கொள்கையை ஆதரிக்கும் புதிய அரசின் பின்னால், ஒட்டுமொத்தத் தமிழ்நாடும் நிற்கும். தமிழ்நாட்டின் நலன் சார்ந்து அனைவரும் ஓரணியில் நிற்போம்" என்றார்.

### விவசாயிகள் மீது வாகனத்தை ஏற்றி 4 பேர் உயிரிழப்பு!

# பா.ஜ.க. முன்னாள் ஒன்றிய அமைச்சரின் மகன் மீதான வழக்கு விசாரணை!

## 4 வாரங்களில் முடிக்க உச்சநீதிமன்றம் உத்தரவு!

புதுடெல்லி, மே 9 -

விவசாயிகள் மீது வாகனத்தை ஏற்றி 4 பேர் உயிரிழந்த வழக்கில், பா.ஜ.க. முன்னாள் ஒன்றிய அமைச்சரின் மகன் மீதான வழக்கு விசாரணையை 4 வாரங்களில் முடிக்க உத்தரப்பிரதேச காவல்துறைக்கு உச்சநீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

உத்தரப்பிரதேச மாநிலம் லக்கிம்பூர் மாவட்டத்தில் கடந்த 2021 ஆம் ஆண்டு அக்டோபரில், பாஜக ஒன்றிய இணை அமைச்சர் அஜய் மிஸ்ரா மற்றும் அவரின் மகன் ஆஷிஸ் மிஸ்ரா ஆகியோர் ஒரு நிகழ்ச்சியில் கலந்துகொள்ள சென்றபோது, விவசாயிகள் கருப்புக்கொடி ஆர்ப்பாட்டம் நடத்தினர்.

அப்போது, விவசாயிகள் கூட்டத்துக்குள் அமைச்சர் மகனின் வாகனம் புகுந்ததில் 4 விவசாயிகள் உடல் நசுங்கி இறந்தனர். பெரும் அதிர்வலைகளை ஏற்படுத்திய இந்த சம்பவம் தொடர்பான வழக்கு விசாரணை உச்சநீதிமன்றத்தில் மீண்டும் விசாரணைக்கு வந்தபோது, பாதிக்கப் பட்டவர்கள் தரப்பில் ஆஜரான வழக்கறிஞர், கடந்த 2 மாதங்களாக சாட்சியங்கள் விசாரணை எதுவும் நடைபெறவில்லை என்று வாதிட்டார்.

முன்னாள் அமைச்சர் மீதான வழக்கு 5 ஆண்டுகள் ஆகியும் இன்னும் முடிக்கப்படாமல் உள்ளதாகவும் சாட்சியங்களை காவல்துறையினரே மிரட்டுவதாகவும் குற்றம் சாட்டினார்.

கடந்த மார்ச் மாதம் முதல் என்ன செய்து கொண்டிருக்கிறீர்கள்? ஏன் சாட்சியங்கள் விசாரணை நடைபெறவில்லை? என்று உத்தரப் பிரதேச பா.ஜ.க. அரசுக்கு கேள்வி எழுப்பிய உச்சநீதிமன்றம் கடும் கண்டனம் தெரிவித்தது.

வழக்குகளை குறிப்பிட்ட கால அளவில் விசாரணை நீதிமன்றம், விசாரித்து முடித்து இடைக்கால அறிக்கையை தாக்கல் செய்யவும் ஆணையிட்டுள்ளது. ஆசிஷ் மிஷ்ரா மீது நிலுவையில் உள்ள விசாரணையை 4 வாரங்களில் முடித்து விசாரணை நீதிமன்றத்தில் அறிக்கை தாக்கல் செய்ய உத்தரப் பிரதேச காவல்துறைக்கு உச்சநீதிமன்றம் உத்தரவிட்டது.

